குழந்தைகளுக்கு வேதாகமம்
வழங்குபவர்

# பவுலின் வியப்பான பிரயாணங்கள்



எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Janie Forest

தழுவியவர்: Ruth Klassen
Alastair Paterson

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2022 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

இயேசுவின் ஊழியக்காரர்களாகிய, பவுலும் சீலாவும், சிறைச்சாலையிலே இருந்தார்கள். அவர்கள் எந்தவிதமான தப்பும் செய்யவில்லை - ஒரு பெண்ணிடமிருந்து அவர்கள் அசுத்த ஆவியை விரட்டியிருந்தார்கள்.



உண்மையான தேவனுடைய
வல்லமையையும் மற்றும்
அவருடைய குமாரனாகிய
இயேசுவையும்
பிலிப்பு பட்டணத்தில்
விக்கிரகங்களை வழிபட்டு
வந்த மக்களுக்கு
காண்பித்தார்கள்.
அதற்காக அவர்கள்
கைது செய்யப்பட்டு,
கசையால்
அடித்து,



சிறையில்
அடைக்கப்பட்டார்கள்.

ஒருவேளை
பவுலும் சீலாவும்
கோபப்பட்டு,
கசப்புடன்
காணப்படுவார்கள்
என்று நீங்கள்
எதிர்பார்க்கலாம்.



உண்மையிலே,
அவர்கள்
நடுராத்திரியிலே
எழுந்து அமர்ந்திருந்து
தேவனை
துதித்து பாட்டு
பாடிக்கொண்டிருந்தார்கள்!
அவர்கள் பாடுவதை
மற்ற கைதிகளும்
காப்பாளர்களும்
கேட்டார்கள்.



தீடீரென, பாடுவது நின்றுபோனது. சிறைச்சாலையை அசைப்பதற்காக தேவன் ஒரு பூமியதிர்ச்சியை அனுப்பினார். கதவுகள் எல்லாம் திறக்கப்பட்டன. எல்லோருடைய சங்கிலிகளும் தளர்ந்து போயின.





ஓஹோ - ஓஹோ! ஏற்பட்ட குழப்பத்திலே கைதிகள் நிச்சயமாக தப்பி ஓடிப்போயிருப்பார்கள் என்று காப்பாளர் நினைத்தான். ஒருவன் தப்பினால் கூட, சிறைக்காவலாளருக்கு மரண தண்டனை கொடுக்கப்படும். துரதிஷ்டவசமாக, அந்த பாவப்பட்ட சிறைக்காவலாளன் தன்னுடைய பட்டயத்தை உருவினான். தன்னைத் தான் அவன் கொலை செய்து கொண்டு, அதிலிருந்து முடிவு பெற நினைத்தான்.

ஆனால் பவுல்
கூவி அழைத்தான்,
"உனக்கு தீங்கு ஒன்றும்
செய்யாதே, நாங்கள்
எல்லாம் இங்கேதான்
இருக்கிறோம்." அந்த
சிறைக்காவலன் அதை
பார்த்த போது,
சொன்னது,
"ஆண்டவமாரே
இரட்சிக்கப்பட
நான் என்ன செய்ய
வேண்டும்?"



அப்பொழுது அவர்கள் சொன்னார்கள், "இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்." மிகுந்த சந்தோஷத்துடன் அந்தச் சிறைக்காவலன் விசுவாசித்தான்.





அடுத்த நாள் விடுவிக்கப்பட்டு, பவுலும் சீலாவும் அநேக பட்டணங்களுக்கு பிரயாணம் பண்ணி, ஜனங்களுக்கு இயேசுவை பற்றி சொன்னார்கள். சிலர் விசுவாசித்தார்கள், ஒரு சிலர் அவர்களை தாக்க முயற்சித்தார்கள்.



ஆனால் தேவனோ
அவருடைய
ஊழியக்காரர்களோடு
இருந்தார். ஒரு இரவு,
பவுல் பல மணி நேரம்
பிரசங்கித்தான்.
ஜன்னலின் அருகே
அமர்ந்திருந்த வாலிபன்
ஒருவன் நித்திரை
அடைந்தான். என்ன
நடந்திருக்குமென்று
யோசித்துப்பாருங்கள்.

அந்த வாலிபன் இறந்திருப்பான் என்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் பவுல் கீழே சென்று அவனைக் கட்டி தழுவி, "இவன் உயிர் இவனுக்குள்ளேயிருக்கிறது." அந்த வாலிபனை உயிருள்ளவனாக உள்ளே கொண்டு வந்தார்கள், மற்றும் எல்லோரும் சந்தோஷப்பட்டார்கள்.



பவுல் மற்றும் சீலா ஐரோப்பாவிலே பிரயாணம் பண்ணின போது அநேக சவால்களை எதிர் கொண்டார்கள். கப்பலிலே பிரயாணம் பண்ணிக் கொண்டிருக்கும் போது பவுல் ஒரு பெரிய சவாலை சந்திக்க நேரிட்டது. அந்தக் கப்பலானது இரும்பினால் கட்டப்பட்ட கடல் வாகனமல்ல, ஆனால் பாய்மர படகுகள், அவைகள் கடுமையான



வானிலையில் தூக்கி எறியப்படலாம்.



பவுல் மீண்டுமாக கைது செய்யப்பட்டதினாலே அவன் அந்த கப்பலிலே காணப்பட்டான். உலகத்தின் தலைநகரான ரோமாபுரில் உள்ள பேரரசர் முன்பாக அவன் நிற்க வேண்டும். வீசிய பெருங்காற்று கப்பலை நிதானப்படுத்தியது. அவர்கள் முன்பாக புயல் வீசும் வாய்ப்பு இருப்பதாக தெரிந்தது.



பவுலுக்கும் அவனோடு
இருந்த கைதிகளுக்கும் மற்றும்
கப்பல் மாலுமிகளுக்கும் அது ஒரு
கடினமான பிரயாணமாக இருந்தது.

"மனுஷர்களே, இந்தப் பிரயாணமானது பேரழிவிலே போய் முடியுமென நான் உணருகிறேன்," என்று பவுல் எச்சரித்தான். ஆனால் கப்பல் தலைவனோ அதற்கு செவி சாய்க்கவில்லை. அவர்கள் கடலின் உள்ளே சென்றார்கள். ஒரு பெரிய புயல் கப்பலை தட்டிய போது, கப்பலைச் சுற்றி கயிறுகளை கட்டி கப்பல் உடையாதபடி பார்த்தார்கள்.



ஒருவேளை கப்பல் உடையுமானால், அவர்கள் எல்லோருக்கும் அந்தத் தண்ணீரே கல்லறையாக மாறும்.

கப்பலானது புயலிலே வீசி எறியப்பட்டதினாலே, கப்பற்தலைவன் இலகுவாக்கும்படி எல்லோருக்கும் கட்டளையிட்டான். மூன்றாவது நாள், பாரம் இழுக்கும் கயிறை கப்பலிருந்து வெளியே வீசி எறிந்தார்கள்.

ஒருவேளை அது உதவி செய்யலாம் என்று யோசித்தார்கள்.



அன்று இரவிலே, ஒரு தேவதூதன் பவுலின் அருகாமையில் நின்று அனைத்து விஷயங்களும் சரியாக முடியுமென்று சொன்னான்.



"தைரியமாயிருங்கள், மனுஷர்களே, எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்.

ஆயினும் நாம் ஒரு தீவிலே விழ வேண்டியதாயிருக்கும்," என்று பவுல் சொல்லிய போது மற்றவர்கள் உற்சாகம் அடைந்தார்கள்.



சில நாட்களுக்குப் பின், மெலித்தா தீவின் அருகே கப்பலானது தூக்கி வீசப்பட்டது. அது ஆழமில்லாத இடத்திலுள்ள பாறைகளில் மோதி துண்டு துண்டானது. கப்பற்தலைவன் நீந்தக் கூடியவர்கள் நீந்திக் கரையேற கட்டளையிட்டான்.



மற்றவர்களும் பாதுகாப்பாக கரை சேர்ந்தார்கள். சிலர் பலகைகளைப் பிடித்துக் கொண்டும் மற்றும் சிலர் உடைந்த பாகங்களை கொண்டும் கரை சேர்ந்தார்கள்.



மெலித்தாவிலே, தேவன் தன்னுடைய வல்லமையை வெளிப்படுத்தினார். அவர்கள் நெருப்பூட்ட விறகுகளை சேர்த்தபோது, ஒரு விரியன் பாம்பு பவுலை கடித்தது. அங்குள்ள ஜனங்கள் அவன் இறந்து போவான் என்று நினைத்தார்கள். ஆனால் விரியன் பாம்பு கடித்ததினால் அவனுக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படவில்லை.



அதினாலே பவுல்
தேவனாயிருக்க
வேண்டுமென்று ஜனங்கள்
யோசிக்க ஆரம்பித்தார்கள்.
அநேக வியாதியஸ்தர்கள்
அவனிடத்தில் வந்த போது
பவுல் அவர்களுக்காக
ஜெபித்தான், தேவன்
அவர்களை சுகப்படுத்தினார்.



இறுதியாக, பவுல் ரோமாபுரிக்கு வந்து சேர்ந்தான். அவனுடைய வழக்கு கேட்கப்பட இரண்டு வருடங்களாயிற்று. அந்த நாட்களிலே, பவுல் ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்தி, வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டான். தன்னிடத்தில் வந்தவர்களுக்கு பவுல் எதைப் பற்றி சொன்னான் தெரியுமா?



தேவனுடைய இராஜ்ஜியத்தை
குறித்து!  இயேசு கிறிஸ்துவைக் குறித்து!
மற்ற பிரயாணங்களிலெல்லாம் எப்படி பவுல்
இருந்தானோ, அதேப்போல் ரோமாபுரியிலும்
தேவனுடைய ஊழியக்காரனாகவே இருந்தான்.



"நல்ல போராட்டத்தை போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்," என்று பவுல் ரோமாபுரியிலிருந்து எழுதினான்.



பவுலின் வாழ்க்கை எப்படி முடிந்ததென்று வேதாகமம் நமக்குச் சொல்லவில்லை, ஆனால் அவன் நீரோ என்ற ரோம பேரரசனால் தலை துண்டிக்கப்பட்டு மரித்தான் என்று மற்ற பதிவேட்டுகள் சொல்லுகின்றன். இயேசு கிறிஸ்துவை மற்றவர்களுக்கு அறிவிக்கிற - ஒரு உண்மையான தேவனின் ஊழியனாக வாழ்ந்து, அதேப்போல் மரித்தான்.



# பவுலின் வியப்பான பிரயாணங்கள்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

அப்போஸ்தலர் 16, 27, 28

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது
வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16